1973 பிப்ரவரி 6]

மதுரை மத்திய சிறைக் கட்டடம்.

* 30 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறைச்சாலைக்கு போதுமான கட்டடங்கள் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், கட்டடங்களை விரிவுப்படுத்த எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கட்டட வசதியைப் பெருக்கும் பொருட்டு, பொதுப் பணித் துறையினரை கலந்துகொண்டு, திட்ட அமைப்புப் படம், மதிப்பீடுகளுடன் அனுகுமாறு மதுரை மத்திய சிறைக் கண்காணிப் பாளரை சிறைத்துறைத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மதுரையில் உள்ள சிறைச்சாலை மத்திய சிறைச்சாலையானாலும்கூட, ஜில்லா சிறைச்சாலைக்கு எந்த அளவுக்கு கட்டடம் இருக்கவேண்டுமோ அந்த அளவுக்கு கட்டடம் இருக்கவில்லை. அதற்கு அடுத்தாற்போலுள்ள அவுட் கார்டன் மட்டும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 9-வது பிளாக் பக்கத்தில் தோட்டத்திற்குப் பக்கத்தில் இடம் நிறைய இருக்கிறது. அதற்கு கட்டடம் கட்டுவதற்கு எவ்வளவு இந்த ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எத்தனை ஆண்டுகளுக்குள் கட்டடம் விரிவு படுத்துவது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது தான் பிளான்ஸ் அண்டு எஸ்டிமேட்ஸ் கேட்கப்பட்டிருக்கிறது. அவை வந்ததற்குப் பின்னாலே மற்ற விவரங்கள் பற்றி முடிவு எடுக்கப்படும்.

உடல் ஊனமுற்றோருக்கு உதவித் தொகை

* 31 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொருளாதார வசதி அற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவித் தொகை கொடுக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அண்மையில் அமைக்கப் பட்டுள்ள உடல் ஊனமுற்றோர் நல மாநில வாரியத்தின் குறிக்கோள் களில் ஒன்றாக, உடல் ஊனமுற்றோர்க்கு நிதியுதவியளித்தல் என்பதை அரசு ஏற்கனவே சேர்த்துக்கொண்டுள்ளது.